தேதி.24.03.2026

<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

O.S. No.25/2017 திரு.பிரேம்சந்த், த/பெ.ராஜாமணி பி.சா.1

<u>பி.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :</u>

நான் முதலில் கையெழுத்து போட்டு வெற்று கடனுறுதி சீட்டு கொடுத்துள்ளேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் இரண்டு ரேகைகள் வைத்துள்ளேன் என்றால் சரிதான். அது என்னுடையது தான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆன அறிவிப்பு, கடன்தொகையை செலுத்தக்கோரி வாதி அனுப்பிய அறிவிப்பு என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 ஆன அறிவிப்பு, வாதி எனது வழக்கறிஞருக்கு அனுப்பிய இரண்டாவது அறிவிப்பு என்றால் சரிதான். வா.சா.ஆ.1ஐ முழுமையாக நிரப்பப்பட்ட பின்னர் தான் கையெழுத்து மற்றும் கைரேகை செய்துள்ளேன் என்றால் இல்லை. வெற்று கடனுறுதி சீட்டில் தான் கையெழுத்து மற்றும் கைரேகை செய்துள்ளேன். நான் வழக்கறிஞரின் குமாஸ்தா என்ற அடிப்படையில் வாதி எனக்கு மனிதாபிமான முறையில் கடனுதவி செய்துள்ளார் ஆனால் நான் பணத்தை பெற்றுக்கொண்டு நம்பிக்கை மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கண்ணன் மற்றும் ஸ்ரீகாந்த் என்பவர்களை வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு தொகையை நான் சாட்சிகளின் முன்னிலையில் வாதியிடமிருந்து வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

வாதியிடமிருந்து நான் வாங்கிய கடன் தொகையை வட்டியுடன் முழுமையாக செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. வாதியிடம் வழக்கு தொகையை பெற்றுக்கொண்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.